காவல் இணை ஆணையாளர், மேற்கு மண்டலம், சென்னை பெருநகர காவல், அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: மருத்துவர் பொ.விஜயகுமார், இ.கா.ப

ந.க.எண்.ப.பி.I(1)/மே.ம/340/7770/2023 நாள்.06.08.2024

மே.ம.ஆணை எண்.457/2024

பொருள் சென்னை பெருநகர காவல் - மேற்கு மண்டலம் - பணிப்பிரிவு - கருணை அடிப்படையில் பணிநியமனம் - திரு. Y.மஹபூப்பாஷா, இளநிலைஉதவியாளர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை பெருநகர காவல், (முன்னாள் காவல் இணை ஆணையாளர் அலுவலகம், மேற்குமண்டலம், சென்னை பெருநகர காவல்) என்பரின் பணியினை பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் தொடர்பாக.

பார்வை அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 26.02.2021.

*******

சென்னை பெருநகர காவல் இ-2 இராயப்பேட்டை காவல் நிலையத்தில் துப்புரவாளராகபணிபுரிந்த (எண்.22) திருமதி.சாரன்பீ என்பவர் பணியிலிருக்கும் போதே 29.04.2000 அன்று இறந்து விட்டபடியால் அவரது மகன் திரு. Y.மஹபூப்பாஷா, என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 14.06.2000 ஆம்தேதி மனு சமர்ப்பித்திருந்தார் .நியமனதாரர் விண்ணப்பநாளில் 12ம்வகுப்பு தேர்ச்சி பெற்றுயிருந்ததால், இக்கல்விதகுதியின் அடிப்படையில் பணிநியமனம் செய்யலாம் என்ற கருத்துரு காவல்துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டு, அன்னாருக்கு கணினி விவர பதிவாளர் பணி வழங்கப்பட்டு 02.05.2006 அன்று சென்னை பெருநகர காவல் இணை ஆணையாளர், கிழக்குமண்டலத்தில் பணிக்கு அறிக்கை செய்து பணி புரிந்து வந்தவர், அரசாணை எண்.220/காவல்-15, நாள்.18.02.2016ன்படி 01.05.2007 முதல் கணினி விவர பதிவாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்பட்டார். பின்னர் தலைமை அலுவலக ஆணை ந.க.எண்.1816770 / NGB-2(2)/2021, நாள்.04.04.2022ன்படி கணினி விவரப்பதிவாளராக இருந்து பணிமாறுதல் முறையில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்று 11.05.2022 பிற்பகல் சென்னை பெருநகர காவல், காவல் ஆணையாளர் அலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்து பின்னர் பணி மாறுதலில் 18.05.2022 முற்பகல் முதல் காவல் இணை ஆணையாளர் மேற்கு மண்டல அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தவர் 12.05.2023 அன்று மீண்டும்

பணிமாறுதல் பெற்றுகாவல் ஆணையாளர் அலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வையில் காணும் அரசாணையில் கூறியுள்ளவிதி முறைகளின் படி வயது வரம்பு, கல்வி தகுதி ஆகியவற்றில் எவ்வித விதிவிலக்கு மின்றியும் அரசாணை நிலை எண்.560 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள் 03.08.1977 மற்றும் அதன் தொடர்பான ஆணைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளில் எவ்வித விதிதளர்வுமின்றி பணிநியமனம் செய்யப்பட்ட திரு.Y.மஹபூப்பாஷா, இளநிலை உதவியாளர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை பெருநகர காவல், (முன்னர் காவல் இணை ஆணையளார் அலுவலகம், மேற்கு மண்டலம் சென்னை பெருநகர காவல்) என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 11.05.2022 முதற்கொண்டு பணிவரன் முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

காவல் இணை ஆணையாளருக்காக
மேற்கு மண்டலம்,
சென்னை பெருநகர காவல்.

பெறுநர்:

திரு.Y.மஹபூப்பாஷா, இளநிலை உதவியாளர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை பெருநகர காவல்.

காவல் ஆணையாளர், சென்னை பெருநகர காவல், வழியாக

நகல்:

மண்டல ஆணை புத்தகம் மற்றம் நகல்-1